**செய்தி வெளியீடு எண்: 715** **நாள்: 27.11.2012**

நாகை மாவட்டம், நாகூர் தர்கா சந்தனகுட உரூஸ் வைபவத்திற்கு ரூபாய் 3 லட்சம் மதிப்புள்ள 40 கிலோ சந்தன கட்டையை இலவசமாக வழங்க அரசாணை பிறப்பித்து சிறுபான்மையினர் நலத்திலும், வளத்திலும், முன்னேற்றத்திலும் அக்கறை கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு 27.11.2012 அன்று நடைபெற்ற வக்ஃபு வாரியக் கூட்டத்தில், வாரியம் நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இக்கூட்டத்தில் வக்ஃபு வாரிய தலைவர், திரு.அ.தமிழ்மகன் உசேன், வக்ஃப் வாரிய உறுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு.முகம்மத் ஜான் மற்றும் இதர வக்ஃபு வாரிய உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்ட தகவலை வக்ஃபு வாரியத்தின் முதன்மை செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு வக்ஃப் வாரியம்.

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**